லாம் என்றும் அங்குள்ள ஜில்லா போர்டிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படியானல் அது பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா? அதன் முடிவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்விதம் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை. ரயில்வே செஸ் நிதி அப்படியொன்றும் அட்சயபாத்திரம் அல்ல. அதிலுள்ள உதவியைக் கொண்டுதான் மெடிக்கல் காலேஜ் துவங்கப்பட்டிருக்கிறது. விவசாய கல்லூரி நடத்துவதற்கும் இதில் பணம் இருக்கும் என்று சொல்லுவதற்கில்லை.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : சிதம்பரத்தில் விவசாயக் கல்லூரி ஏற்கனவே இருந்து வருவதால், தென் ஜில்லாக்களுக்கு எல்லாம் பொதுவாக இருக்கும் மதுரை ஜில்லாவில் இந்த விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவும் சர்க்காரின் யோசனையில் இருந்து வருகிறது.

SRI N. R. THIAGARAJAN : 'சோழவள நாடு சோறுடைத்து' என்றிருப்பதால் தஞ்சையில் விவசாயக் கல்லூரி தேவையில்லை. முத்துடைய பாண்டிய நாட்டை தேர்ந்தெடுத்து மதுரையில் இந்த விவசாயக் கல்லூரியை ஸ்தாபிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முத்துடைய நாடு பாண்டிய நாடு என்றால் அங்கே விவசாயக் கல்லூரியே தேவையில்லை என்று சொல்லிவிடலாம். மதுரையிலும் விவசாயத்தில் கவனம் செலுத்தக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்கும் வைக்கலாமா என்று சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

SRI A. MARIAPPAN : இந்த விவசாயக் கல்லூரியை சேலத்தில் நிறுவ அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொருவரும் தங்கள் ஜில்லாவில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இப்போது எங்காவது ஒரு ஜில்லாவில்தான் ஏற்படுத்த முடியும்.

Woolly sheep (import)

* 1116 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் உரோமம் அதிகமாக கொடுக்கும் ஆடுகள் உள்ளனவா?

27th March 1961]

(இ) இல்லையென்றால், அப்படிப்பட்ட ஆடுகளை மற்ற ராஜ்யங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கொண்டுவர உத்தேசமுண்டா ?

(உ) எங்கெங்கேயிருந்து கொண்டுவரப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATCHALAM : (அ) Yes, Sir. Fine white woolly sheep are available in Nilgiris. Mixed coloured woolly sheep, black woolly sheep and coarse white woolly sheep are available in some parts of the State, notably in Coimbatore district.

(இ) & (உ) The local breeds require improvement for obtaining increased yield and white wool. Woolly breeds from Rajasthan have therefore been imported for upgrading the local sheep in the Sheep and Wool Extension Centres of this State. Foreign breeds like the Romney Marsh breed of sheep have been imported from abroad for use in the Sheep Farm, Ootacamund. The Indian Council of Agricultural Research has been addressed for the import of certain other varieties of foreign sheep noted for fine wool which may probably be imported from countries like Australia, New Zealand, etc.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மூன்றாவது ஐந் தாண்டுத்திட்ட காலத்தில் எத்தனை சென்டர்களில் இது போன்ற வேலைகள் ஆரம்பிக்க உத்தேசமிருக்கிறது ? எங்கெங்கு ஆரம் பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந் தாண்டுத்திட்டத்தில் இன்னும் 12 ஷீப் அன்ட் வுல் எக்ஸ்டென் ஷன் சென்டர்கள் அமைக்கப்படும். இதற்காக ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1961-62-ல் மூன்று சென்டர்கள் வைப்பதாக உத்தேசமிருக்கிறது. இதை கனம் அங்கத்தினர் அவர்கள் வரவு செலவு திட்டத்தில் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

SRI R. SRINIVASA IYER : ஸார், நீலகிரி ஜில்லாவில் ரோம்னிவுல் நல்ல முறையில் உற்பத்தி செய்து வந்தாலும், இது கோர்ஸ் வுல்லாகத்தான் இருக்கிறது. ஆகவே Cheirot sheep-ஐ அதிகமாகவரவழைத்து வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதெல்லாம் அப்போதைக்கப்போது ஆராய்ச்சி செய்யப்படுகிறது, பரிசீலனை செய்யப்படுகிறது, அதனுடைய முடிவுகளுக்கு தக்கபடி நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. இதைப்பற்றிய விவரங்களுக்கு தனியாக கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : After the import of wool sheep, will the work of wool-gathering be increased?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is for the hon. Member to Judge.

[27th March 1961

Sri K. VINAYAKAM : With the object of increasing the output of wool in our State, Government have been importing sheep from Rajasthan and foreign countries. How are their powers of procreation to increase suitable breeds? Are they congenial to our weather?

The Hon Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that they are quite all right.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், இப்போது சேலம் ஜில்லாவிலுள்ள மேய்ச்சேரியில் ஆடுகள் அதிகமாக பயன்படுகின்றனவா? அங்கு நீண்ட ரோமமுள்ள ஆடுகளை வரவழைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மேய்ச்சேரியில் இருக்கின்ற ஆடுகள் அதிகமாகவும் மாமிசத்திற்குத்தான் பயன் படுகின்றன.

Last grade servants (discharge)

* **1117** *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கம், குடியாத்தம் கிளை சார்பில் கடைநிலை ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதுபற்றிய தீர்மானம் ஏதேனும் சர்க்காருக்கு அனுப்பப் பட்டதா?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) No Sir.

(இ) Does not arise.

Radios in buses (accidents)

* **1118** *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 28–1–61-ல் 207-ம் கேள்வியின் பதிலையொட்டி பஸ்களில் ரேடியோக்கள் வைத்ததின் விளைவாக எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன?

(இ) உயிர் சேதம் ஏதாவது ஏற்பட்டதா?

The Hon. Sri V. RAMAIAH : (அ) & (இ) No information is available. It is considered that radio sets, if installed in buses will be a very likely cause of accidents.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பஸ்களிலே ரேடியோ வைப்பதன் காரணத்தினால் பஸ் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கூறி, அதனால் தான் இந்த ரேடியோக்களை வைக்கக்கூடாது என்று போட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆகவே இப்போது பதிலில் அந்த மாதிரி தகவல்